DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.100/2021**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பிரபாகரன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | தர்மலிங்கம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.11.2025

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் பட்டவர்த்தி கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். 19.09.2017 ம் தேதி காலை 08.00 மணிக்கு குடும்பத்துடன் எனது இருசக்கர வாகனமான Fashion Pro TN 47 AU 9156 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று மதுக்கரை செல்லாண்டியம்மன் கோவில் அருகில் நிறுத்திவிட்டு சாமிகும்பிட்டு விட்டு வந்து 08.30 மணியளவில் பார்த்தபோது எனது இருசக்கர வாகனம் காணவில்லை.

2. தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. குடும்பத்தில் உள்ளவர்களிடம் கேட்டுவிட்டு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள TN 47 AX என்று உள்ள இருசக்கர வாகனம் என்னுடையதுதான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) 25.09.2017 எனது வண்டியை போலிசார் கண்டுபிடித்தார்கள்.

3. எனது வாகனத்தை போலிசாரிடம் அடையாளம் காட்டினேன். போலிசார் எனது வாகனத்தை ஆஜர் எதிரி சிவசுப்பிரமணியம் திருடியதாக சொன்னார்கள்.

நான் எனது வாகனத்தை நீதிமன்றத்தில் மனு செய்து வாங்கிச்சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் 3 புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் என்னுடையதுதான். (**இருசக்கரவாகனம் அடங்கிய மூன்று புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. நான் பட்டவர்த்தி கிராமத்தில் உள்ளேன். நான் டிரைவராக 15 வருடங்களாக வேலை பார்க்கிறேன். செல்லாண்டியம்மன் கோவில் அமைந்துள்ள பகுதி காலையில் கூட்டமாக இருக்கும் என்றால் சரிதான். யார்யார் கோவிலுக்கு சென்றோம் என்றால் நான், எனது தம்பி பிரகாஷ், அப்பா தர்மலிங்கம், அண்ணன் தியாகராஜன் ஆகியோர்களுடன் கோவிலுக்குச் சென்றேன். காலதாமதமாகத்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. வண்டி காணாமல் போனவுடன் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் தேடிப்பார்த்தேன் வீட்டில் ்உளளவர்களிடம் பேசி புகார் கொடுத்தேன். எங்கு தேடிப்பார்த்தேன் என்றால் காட்டுப்புத்தூர், கிருஷ்ணராயபுரம் பகுதிகளில் தேடிப்பார்த்தேன். தேடிப்பார்த்த விவரங்களை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். வெளியூர் சென்றிருந்ததற்காக உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வண்டி தொலைந்தவுடன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். புகாரில் என்னுடன் சகோதரர்கள் அப்பா கூடவந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். காவல் நிலையத்தில் நான் தான் புகார் மனு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள வண்டி எண் மட்டும் தெரியும் இன்ஜின்நெம்பர் தெரியாது. புகார் கொடுக்கும்போது லைசென்ஸ , ஆர்.சி.புக் ஆகியவற்றை குறிப்பிட்டு மனுவாக எழுதி புகார் கொடு'தேன்.

4. வெளியூர் சென்றேன் என்ற விவரத்தை முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செல்லாண்டியம்மன் கோவில் உள்ள பகுதியில் கடைகள், CCTV கேமரா

உள்ளதா என்றால் தற்போதுதான் உள்ளது வண்டி காணமல் போன போது இல்லை . காவல் நிலையத்திற்கும், வண்டி காணாமல் போன இடத்தில் சுமார் 1கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வண்டி காணாமல் போனபோது குடும்பத்துடன் தான் இருந்தேன் அப்போது குடும்பத்தாரிடம் கேட்டு புகார் கொடுத்திருக்கலாம் என்றால் சரிதான்.

5. செல்லாண்டியம்மன் கோவிலுக்கு செல்லவில்லை என்றாலும், வண்டி காணாமல் போகவில்லை என்றாலும் சரியல்ல. வண்டி காணாமல் போகவில்லை காவல் நிலையத்தார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய வண்டி எண். TN 47 AU 9156 ஆனால் போலிசார் என்னிடம் கொடுத்த வண்டி எண். TN 47 AX என்றால் சரிதான் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 போட்டோவில் உள்ள TN 47 AX Fashion pro என்னுடையதல்ல.

6. நான் பெற்ற வாகனத்தை உண்மைத் தன்மையை மறைத்து விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை நான் விற்றுவிட்டேன் என்றால் இல்லை. மேற்படி வாகனம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் யாரிடம் உள்ளது என்று தெரியவில்லை. நான் எனது வாகனத்தை விற்பனை செய்துவிட்டு எதிரி திருடியதாக புகார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 15:13:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.